LAOP.No. 4/2011

Dated : 12.03.2024

Time: 12.40 p.m to 12.45 p.m

P.W- 1 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 7 எதிர்ப்பாளர் சார்பாக குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை

1) பெத்தநாயக்கன்பாளையம் சர்வே எண். 165/13 என்ற நிலத்தில் 3115 சதுர மீட்டர் அளவுள்ள இடத்தை தேசிய நெடுஞ்சாலைக்காக கையகப்படுத்தப்பட்டது தொடர்பாக தான் அரசாங்கத்தால் கையக படுத்தப்பட்டுது என்றால் சரிதான். அந்த சொத்திற்காக தான் பழனியம்மாள் என்பவர் 61 நபர்களுக்கு எதிராக அசல் வழக்கு எண். 328/1981 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. மேறப்டி 1ம் எதிர்ப்பாளர் ஆறுமுகம் பெயரில் 24.04.1987 ல் பழனியம்மாள் என்பவர் ஒரு உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பழனியம்மாள் 04.08.1993 ல் காலமாகிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) அதன் தொடர்ச்சியாக ஆறுமுகம் மேற்படி வழக்கில் உயிலை அனுசரித்து தரப்பினராக சேர்ந்தார் என்றால் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.அந்த வழக்கில் விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் வழங்கி 27.09.2006 ல் தீர்ப்பானை பகரப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு இல்லை என்றும் எனவே அது நாளது வரை அமலில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆறுமுகத்தின் வாரிசுகள் தான் இவ்வழக்கின் எதிர்ப்பாளர்கள் என்றால் சரிதான்.

3) மேற்படி நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சீராய்வு மனு எண். 50/2023 ல் மாண்புமிகு உயர் நீதிமன்றம் தான் ஏற்கனவே உத்தரவு பிறப்பித்து இருந்த CRP.No.4813/2017 ல் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள 6,7 பத்திகளை நீக்கரவு செய்வதாகவும், அந்த தீர்ப்பாணையை பொறுத்து அந்த நீதிமன்றத்தில்

சம்மந்தப்பட்ட நபர்கள் பரிகாரம் தேடிக்கொள்ளலாம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சீராய்வில் நான் 11 வது எதிர்மனுதாரர் என்றால் சரிதான்.

(எதிர்ப்பாளர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

Sd/-K.Ananthan

**Subordinate Judge,**

**Attur.**